(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

ஆண்டுப்பட்டிகை
பல்வகை
முதன்மைப் பதிவேடு
அமர்வு

STC.No.201/2022

எதிரி தரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் DW –3

| | | |
|---|---|---|
| பெயர் | : | அந்தோணி கனிஷ் திவாகர் |
| த/பெ | : | ஜான் |
| கிராமம் | : | மணலி |
| வட்டம் | : | மாத்தூர் |
| வயது | : | 43 |

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி மு.ச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் சாட்சியாவேன். நீதிமன்ற அழைப்பாணையின் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் Transport தொழில் செய்து வருகிறேன். TN 18AB 0540 என்ற 40 அடி அசோக் லேலேண்ட் நிறுவன டிரைலர் வாகனம் என்னுடையது. TN 18AB 0568 என்ற 40 அடி அசோக் லேலேண்ட் நிறுவன டிரைலர் வாகனம் என்னுடையது. நான் சென்னையில் தொழில் செய்து வருகிறேன். எனது வாகனங்கள் திசையன்விளையில் ஒருபோதும் சரக்கு எடுத்தது கிடையாது. திசையன்விளையில் உள்ள சென்னை ஸ்டீல்ஸ் நிறுவனத்திற்கு வாகனங்கள் எதையும் அனுப்பியது கிடையாது. நான் இதுநாள்

வரை திசையன்விளைக்கு தொழிலுக்கு எனது வாகனங்கள் எதையும் அனுப்பியது கிடையாது.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) எனது சொந்த ஊர் சென்னை ஆகும். எனது முகவரி அனைத்தும் சென்னையை சார்ந்தது ஆகும். எனக்கு மொத்தம் 7 வாகனங்கள் இருக்கிறது. மேற்படி வாகனங்கள் அனைத்தும் டிரைலர் வாகனங்கள் ஆகும். 7 வாகனங்களுக்கும் தனி தனியாக ஓட்டுனர் இருப்பார்கள் என்றால் சரிதான். வாகனத்தை என்னிடம் ஒரு லோடு எடுக்கும் ஆர்டர் கொடுப்பார்கள் என்றால் ஓட்டுனர் மூலம் எனது வாகனத்தை அனுப்புவேன். நான் 18 வருடங்களாக தொழில் செய்து வருகிறேன். மேற்படி வாகனங்கள் எந்த ஊருக்கு சென்று எந்த ஊருக்கு செல்கிறது என்பதை அந்த அந்த வாகனத்தின் டிரிப் சீட்டை பார்த்தால் தான் தெரியும். ஒரு வாகனத்தில் டிரிப் சீட் பார்க்கமால் அனுமானத்தின் அடிப்படையில் ஒரு வாகனம் எங்கு சென்றது என்று குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் சரிதான். உங்கள் வாகனம் புகார்தாரர் நிறுவனத்தில் இருந்து எதிரி நிறுவனத்திற்கு சரக்கு ஏற்றி சென்று உள்ளது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கீறிர்கள் என்றாலும் சரியல்ல. எனக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. உங்கள் சாட்சியம் இவ்வழக்கிற்கு தேவையற்றது என்றால் சரியல்ல.

(ஓம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்.